**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No. 210/2024</u>**

**<u>வழக்கு சாட்சி PW-9</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வெள்ளத்துரை | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | செல்லையா | தொழில் | : | தனியார் நிறுவனம் |
| கிராமம் | : | கீழக்கலங்கல் | வயது | : | 59 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of December 04th, 2025.

**(1ம் எதிரி காணொளி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். 4ம் எதிரி ஆஜரில்லை. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் கீழக்கலங்கலில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் நிறுவன தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் உள்ள 2வது கையெழுத்துக்கள் என்னுடையது தான். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு நான் கடையில் நின்று கொண்டிருந்தபோது, போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்த கையெழுத்துக்களை போட்டு கொடுத்தேன். பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.4** ஆகும். அத்தாட்சியில் உள்ள 2வது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.5** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 26.08.2023ம் தேதி, 19.00 மணிக்கு கவிக்குயில் என்பவரது வீட்டின் பக்கம் வைத்து போலீசார்

சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. பின்னர், அன்றைய தினம் சம்பவயிடத்தில் வைத்து இரத்தம் பட்ட மண், இரத்தம் படாத மண், கொச்சை கயிறு ஒன்றையும் போலீசார் அத்தாட்சி கைப்பற்றினார்கள் என்றால் சரியல்ல. மேற்படி பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் நானும், ஜெயபாஸ்கர் என்பவரும் கையெழுத்து செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது அதற்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.12.04 18:46:01 +0530

**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No. 210/2024</u>**

**<u>வழக்கு சாட்சி PW-10</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வேளாங்கண்ணி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | மரியமிக்கேல் | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | கீழக்கலங்கல் | வயது | : | 63 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of December 04th, 2025.

**(1ம் எதிரி காணொளி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். 4ம் எதிரி ஆஜரில்லை. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் கீழக்கலங்கலில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் நடராஜன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையெழுத்து மற்றும் 27.08.2023ம் தேதி தயார் செய்யப்பட்ட அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்துக்கள் என்னுடையது தான். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு நான் காவல்நிலையம் சென்றிருந்தேன். போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்த கையெழுத்துக்களை போட்டு கொடுத்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.6** ஆகும். அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.7** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 27.08.2023ம் தேதி, காலை 07.00 மணிக்கு கருப்பினான்குளம் பஸ்ஸ்டாப்பில் எதிரிகள் நடராஜன் மற்றும் முத்துமாரி ஆகியோர்களை கைது செய்து என் முன்பும், துரை என்பவர் முன்பும் விசாரித்தபோது, எதிரி நடராஜன் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் காலை 09.00 மணிக்கு எதிரி நடராஜன் அவரது வீட்டிலிருந்து அடையாளம் காட்டி ஆஜர் செய்த இரத்தக்கறை படிந்த அரிவாள் ஒன்று, இரத்தக்கறை படிந்த கருப்பு வெள்ளை நிறத்தில் கட்டம் போட்ட அழுக்கு படிந்த சாரம் ஒன்று, சிவப்பு நிற இரத்தக்கறை படிந்த ஜாக்கெட் ஒன்று, இரத்தக்கறை படிந்த பூ டிசைன் போட்ட சேலை ஒன்று ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றினார்கள் என்றால் சரியல்ல. மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் நானும், துரை என்பவரும் கையெழுத்து செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது அதற்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.12.04 18:46:13 +0530

<u>வாக்குமூலம்</u>
<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>
<u>வழக்கு எண் : SC.No. 210/2024</u>
<u>வழக்கு சாட்சி PW–11</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வி.பி.துரை | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | வேல்ச்சாமி | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | கீழக்கலங்கல் | வயது | : | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of December 04th, 2025.

**(1ம் எதிரி காணொளி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். 4ம் எதிரி ஆஜரில்லை. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

<u>முதல் விசாரணை :</u>

நான் கீழக்கலங்கலில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் நடராஜன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது கையெழுத்து மற்றும் 27.08.2023ம் தேதி தயார் செய்யப்பட்ட அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையெழுத்துக்கள் என்னுடையது தான். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு கலங்கல் மாட்டுச்சாவடி கடைப்பக்கம் நின்றிருந்தபோது, போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்த கையெழுத்துக்களை போட்டு கொடுத்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.8** ஆகும். அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.9** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி  கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 27.08.2023ம் தேதி, காலை 07.00 மணிக்கு கருப்பினான்குளம் பஸ்ஸ்டாப்பில் எதிரிகள் நடராஜன் மற்றும் முத்துமாரி ஆகியோர்களை கைது செய்து என் முன்பும், வேளாங்கண்ணி என்பவர் முன்பும் விசாரித்தபோது, எதிரி நடராஜன் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் காலை 09.00 மணிக்கு எதிரி நடராஜன் அவரது வீட்டிலிருந்து அடையாளம் காட்டி ஆஜர் செய்த இரத்தக்கறை படிந்த அரிவாள் ஒன்று, இரத்தக்கறை படிந்த கருப்பு வெள்ளை நிறத்தில் கட்டம் போட்ட அழுக்கு படிந்த சாரம் ஒன்று, சிவப்பு நிற இரத்தக்கறை படிந்த ஜாக்கெட் ஒன்று, இரத்தக்கறை படிந்த பூ டிசைன் போட்ட சேலை ஒன்று ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றினார்கள் என்றால் சரியல்ல. மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் நானும், வேளாங்கண்ணி என்பவரும் கையெழுத்து செய்ததாக போலீசார் விசாரணையில்  கூறிவிட்டு, தற்போது அதற்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.12.04 18:46:25 +0530